In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.129/2025

Deposition of P.W.16

| | |
|---|---|
| Name | திரு.சிவபெருமாள் |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 18th day of February 2026.

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

**முதல் விசாரணை :**

நான் தட்டப்பாறை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் வடக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வந்தபோது 15.12.2024 அன்று வடக்கு காவல் நிலைய குற்ற எண்.565/2024 பிரிவு 194 BNSS @ 103(1) BNS வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும இதர தபால்களை ஆய்வாளரிடம் 13.30 மணிக்கு பெற்று கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 3 அவர்களிடம் 14.55 மணிக்கு ஒப்படைத்து உரிய அத்தாட்சி பெற்று நிலையம் வந்தேன். இந்த பணிக்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு அ.சா.ஆ.13. இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆய்வாளர் விசாரணையில் முதல் தகவல் அறிக்கையை மட்டும் துரித தபாலாக பெற்று கொண்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஒரு கவர் என்னிடம் கொடுத்தார்கள். முதல் தகவல் அறிக்கை 14.12.2025 அன்று பதிவு செய்யப்பட்டுளள்து என்றால் சரிதான். நீதிமன்றத்தில்

காலதாமதமாக ஒப்படைக்கப்பட்டதை சரி செய்வதற்காக என்னை சாட்சியாக சேர்த்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் சொன்ன பணியை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/–எம்.பி.முருகன்
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.